MediShield Life

# மெடிஷீல்டு லைஃப் திட்டமும் தனியார் மருத்துவமனை காப்புறுதித் திட்டமும் செயல்படுவது எப்படி

**சிங்கப்பூரர்கள் பலரும் ஒருங்கிணைந்த காப்புத் திட்டங்கள் வடிவில் தனியார் மருத்துவமனை காப்புறுதித் திட்டங்களை வாங்கியிருக்கிறார்கள்.**

ஒருங்கிணைந்த காப்புத் திட்டத்தில் இரண்டு கூறுகள் உள்ளன:




- அதிக காப்பீடு பெற விரும்பினால் (எ.கா. தனியார் மருத்துவமனைகளின் உயர் செலவுகளுக்குக் காப்பீட்டுத்தொகை பெறுவதற்கு)
- தனியார் காப்புறுதி நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது

- பொது மருத்துவமனைகளின் பி2/சி வகுப்பு படுக்கைப்பிரிவுகளின் பெருந்தொகை கட்டணங்களைக் கட்டுவதற்குப் போதுமானது
- மத்திய சேமநிதிக் (மசேநி) கழகத்தால் நிர்வகிக்கப்படுகிறது

உங்களது தனியார் காப்புறுதி நிறுவனத்திடம் நீங்கள் செலுத்தும் சந்தாவில் ஏற்கனவே மெடிஷீல்டு திட்டத்தின் சந்தாவும் உள்ளடங்குகிறது.

நான் ஒருங்கிணைந்த காப்புத் திட்டத்தில் சேர்ந்திருக்கிறேனா என்பதை எப்படித் தெரிந்துகொள்வது?

உங்களது தனியார் காப்புறுதித் திட்டச் சந்தாவை முழுமையாக அல்லது அதில் ஒரு பகுதியைச் செலுத்துவதற்கு நீங்கள் மெடிசேவ் பயன்படுத்துவதோடு, அத்திட்டம் பின்வருபவற்றில் ஒன்றாகவும் இருந்தால், நீங்கள் ஒருங்கிணைந்த காப்புத் திட்டத்தில் சேர்ந்திருக்கிறீர்கள்!

நீங்கள் ***cpf.gov.sg*** இணையத்தளத்திலும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். உங்களது சிங்பாஸ் மறைச்சொல்லைப் பயன்படுத்தி ***my cpf Online Services*** இணையப்பக்கத்தில் உட்பதிவு செய்யவும். பிறகு, ***"My Messages"*** பகுதிக்குச் சென்று, ***"Insurance"*** பகுதியைப் பார்க்கவும்.

ஒருங்கிணைந்த காப்புத் திட்டச் சந்தாவைச் செலுத்த எனக்கு நிதி உதவிகள் கிடைக்குமா?

ஆமாம்! நீங்கள் தகுதிபெற்றிருக்கும் வரையில், **உங்களது ஒருங்கிணைந்த காப்புத் திட்டத்தின் மெடிஷீல்டு லைஃப் பகுதிக்கு** நிதி உதவிகள் பெறுவீர்கள்.

நான் ஏற்கனவே ஒருங்கிணைந்த காப்புத் திட்டத்தில் சேர்ந்திருந்தால், மெடிஷீல்டு லைஃப் எனக்குப் பயனளிக்குமா?

உங்களது ஒருங்கிணைந்த காப்புத் திட்டத்தின் மெடிஷீல்டு லைஃப் பகுதி, வாழ்நாள் முழுவதும் உங்களுக்குக் காப்பளிக்கும். உங்களுக்கு ஏற்கனவே இருக்கும் உடல்நலப் பிரச்சனைகளும் இதில் உள்ளடங்கும். ஏற்கனவே இருக்கும் உடல்நலப் பிரச்சனைகளுக்கு உங்களது தனியார் காப்புறுதியாளர் காப்பீடு அளிக்காவிட்டாலும், மெடிஷீல்டு லைஃப் காப்பளிக்கும்.

**நீங்கள் ஒருங்கிணைந்த காப்புத் திட்டத்தில் சேர்ந்திருந்தால், நீங்கள் ஏற்கனவே மெடிஷீல்டு திட்டத்திலும் சேர்ந்திருப்பதாக அர்த்தமாகும்!**

| | | | | |
|---|---|---|---|---|
| AIA HealthShield Gold Max | Aviva MyShield | Great Eastern SupremeHealth | NTUC Income IncomeShield | Prudential PruShield |

மெடிஷீல்டு லைஃப் பற்றி சுகாதார அமைச்சு உங்களுக்காகப் படைக்கும் எட்டு-பாகத் தொடரின் ஆறாம் பாகம் இது.
மெடிஷீல்டு லைஃப் பற்றி மேல்விவரம் அறிய, www.medishieldlife.sg இணையப்பக்கம் பார்க்கவும்.

MINISTRY OF HEALTH
SINGAPORE